## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.268/2019**

**PW–1**

**Date :–26.03.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. மணிகண்ட குமார் | Caste | |
| த/பெ. | திரு. ராமகிருஷ்ணன் | Calling | சேல்ஸ்மேன் |
| Village | குளித்தலை | Religion | |
| Taluk | குளித்தலை | Age | 42 /2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

**நான் தற்போது குளித்தலையில் வசித்து வந்து சேல்ஸ்மேன் வேலை செய்து வருகிறேன். கடந்த** 02.08.2017 **அன்று இரவு** 08.35 **மணியளவில் நான் சொந்தவேலையாக திருச்சி சென்றுவிட்டு பெட்டவாய்த்தலை இரயில்வே மில்கேட் அருகே நான் நின்றுக்கொண்டிருந்தபோது மணிகண்டனும் காமராஜ் என்பவரும் எனதுஅண்ணன் சுரேஷ்குமார் என்பவருக்கு மில்கேட் அருகில் திருச்சி கரூர் நெடுஞ்சாலையில்** TN-48 AB-4453 **என்ற பதிவென்கொண்ட** scooty pep **வாகனத்தை ஓட்டிய சுந்தர்ராஜ் மகன் அசோக்குமார் என்பவர் எனது அண்ணன்** TN-47 X-7573 **என்ற பதிவு எண் கொண்ட** passion pro **இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அந்த விபத்தில் எனது அண்ணனுக்கு இடது கண்ணிலும், பின் தலையிலும் காயம் ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் விபத்து பற்றி மணிகண்டன் என்பவரிடம் கேட்டு தெரிந்துக்கொண்டு எனது அண்ணனை திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளதாக சொன்னதால் நான் திருச்சி அரசு மருத்துவமனை சென்று எனது அண்ணனை பார்த்தேன் . அப்போது அவரது இடது கண்ணிலும் , பின்தலையிலும் காயம்பட்டு அவரது பிரேதம்**

**அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது** . 03.08.2017 **அன்று பெட்டவாய்த்தலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன்** . **என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்** . **அந்த புகார் அ .சா.ஆ.**1 **ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

**சம்பவம் கேள்விபட்டுதான் தெரியும்**. **எனக்கு மணிகன்டன் என்பவர்தான் தகவல் கூறினார்**. **சம்பவத்தின்போது நான் குளித்தலையில் இருந்தேன்**.

Sd/-xxxx

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.